01 ஆவது அகவையில்

சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM

EVERYTHING FOR PEOPLE

2020 - 2021

இடைவிடாத ஒரு வருட பயணம்

இது உங்களாலேயே சாத்தியமானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

புதன்கிழமை 21.04.2021 supeedsam.com supeedsam@gmail.com

ஓராண்டில் உங்களுடன்

மனதில் ஒரு கேள்வியும் உறுத்தலும் எம்மை பலதடவைகள் சிந்திக்க வைத்தன.அது என்ன கேள்வி? நமது வடமாகாணத்திலிருந்து பல்வேறு பத்திரிக்கைகள் நாள்தோறும் வெளிவருகின்றது.ஆனால் கிழக்கு மாகாணத்திற்கென எந்தவொரு பத்திரிக்கைகளும் இல்லையே.வருகின்ற பத்திரிக்கைகளும் இடைநடுவில் நின்றுவிடுகின்றது.இதற்குக்காரணம் நம்மவர் மத்தியில் வாசிப்புப்பழக்கம் அருகிவிட்டதா?இல்லை பத்திரிக்கைகளை முன்னெடுத்துச்செல்ல முயற்சியாளர்களுக்கு போதிய பொருளாதார வசதியின்மையே காரணம்.

02 ஆம் பக்கத்தில்...

கட்சி பிளவுகளுக்கு ஏற்ப

மாகாணத்தின் வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கும் சகாப்தம் முடிந்துவிட்டது

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கட்சி வேறுபாடுகள் காரணமாக மாகாணத்தில் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் சகாப்தம் மாறி விட்டது என்று கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

மட்டக்களப்பு ஊறணி விபத்தில்

4 வாகனங்கள் சேதம்; மூன்று பேர் காயம்

(ஏறாவூர் நாஸர்)

மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியில் ஊறணி பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் நான்கு வாகனங்கள்

02 ஆம் பக்கத்தில்...

மட்டக்களப்பில் பாதுகாப்பு அதிகரிப்பு

(மட்டுநிருபர்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்று இரண்டு ஆண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நருக்குள் நுழையும் பிரதான இடங்களில் பொலிஸார் விசேட

02 ஆம் பக்கத்தில்...

சீயோன் தேவாலயத்திற்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள்

(மட்டுநிருபர்)

ஈஸ்டர்தாக்குதலுக்குள்ளான மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான டாக்டர் காவிந்த ஜயவர்த்தன,ஹெட்ட அப்புகாமி ஆகியோர் விஜயம் செய்தனர்.

இதன்போது மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் பிரார்த்தனையும் நடாத்தப்பட்டது.

தாக்குதல் சம்பவம் நடைபெற்று இரண்டு

02 ஆம் பக்கத்தில்...

மே தின கூட்டம், பேரணிகளுக்கு தடை

(ஊர்காவலன்)

மே தின கூட்டங்களையும், பேரணிகளையும் ரத்து செய்ய கொவிட்19 பரவலை

02 ஆம் பக்கத்தில்...



மட்டு.விற்கு மே மாதம் ஜனாதிபதி வருகிறார்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

ஜனாதிபதியின் கிரமத்துடன் கலந்துரையாடல் நிகழ்சிசத் திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு மக்களை சந்திப்பதற்காக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ எதிர்வரும்

02 ஆம் பக்கத்தில்...

பொலநறுவை-கொழும்பு கடுகதி ரயில் சேவையினை

மட்டக்களப்பிலிருந்து ஆரம்பியுங்கள்

சாணக்கியன் கோரிக்கை



பொலநறுவை முதல் கொழும்பு வரையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் கடுகதி ரயில் சேவையினை மட்டக்களப்பிலிருந்து ஆரம்பிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு

02 ஆம் பக்கத்தில்...

வடமராட்சி அல்வாய் பகுதியில் வாள்வெட்டு: குடும்பஸ்தர் பலி

(வடமராட்சி நிருபர்)

வடமராட்சி அல்வாய் பகுதியில் உறவினர்களிடையே ஏற்பட்ட குடும்பத்தகராறு வாள்வெட்டில் முடிவடைந்ததில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்திலே பலியானதுடன், மேலும் மூவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக

02 ஆம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்

போரில் உயிரிழந்தவர்களுக்கும் அஞ்சலி செலுத்த அனுமதியுங்கள்

ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்த அரசாங்கம் பாதுகாப்பளித்து அனுமதி அளிப்பதை போல யுத்தத்தின் போது உயிரிழந்தோரையும் நினைவு கூருவதற்கு இந்த அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார். கோரிக்கை விடுத்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நாளைய தினம் அனுஷ்டிக்கப்பட்டஉள்ள நிலையில் அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் ,நாட்டில் கடந்த 30 ஆண்டுகளாக நடைபெற்ற போரின் போது வடபகுதியில் எத்தனை ஆலயங்கள் மீது குண்டு வீசப்பட்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதில் எத்தனையோ மக்கள் இறந்தார்கள். தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள். அந்த வேளையிலே தென்பகுதியில் இருந்து யாரும் எங்களுக்காக குரல் கொடுக்கவில்லை. எங்களுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு நிச்சயமாக இருக்கின்றது.

அது உண்மைதான். இப்படியான ஒரு நிலையில் தென் பகுதியில் நடைபெற்ற ஒரு நிகழ்வுக்கு நாங்கள் ஏன் நினைவு நிகழ்வுகளை செய்ய வேண்டும்? என்று ஒரு கேள்வி பலரிடையே நிச்சயமாக இருக்கின்றது.

ஆனால் சரியான ஒரு காரியத்தை ஒருவர் செய்யவில்லை என்பதற்காக, சரியான ஒரு காரியத்தை நாங்கள் செய்யாது இருக்கக்கூடாது. ஆண்டவர் இயேசு சொல்லுவார் பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அவற்றை எல்லாம் நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள். அதற்கு ஆதரவாக இருக்க வேண்டும் என கூறப்படுகின்றது. அதேபோல், அவர்களுடைய துன்ப வேளைகளில் எங்களுடைய ஆதரவையும், ஒத்துழைப்பையும் கொடுக்க வேண்டியது எங்களுடைய கிறிஸ்தவ மக்களுடைய கடமையாகும். ஆகவே நாளைய தினத்தில் இந்த அஞ்சலி நிகழ்வுகளை நாங்கள் செய்து எங்களுடைய ஆதரவினையும் அஞ்சலிகளையும் செலுத்துவதற்கு முன்வருவோம். இந்த வேளையிலே அரசாங்கத்திடம் நாங்கள் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றோம். இந்த ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தோரை நினைவுகூர்வதற்கு, அனுமதி வழங்கி அதற்கான பாதுகாப்புகளை நீங்கள் கொடுக்கிறீர்கள். அதற்காக நாங்கள் நன்றி சொல்கின்றோம்.

இதேபோல தமிழ் மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் 30 ஆண்டுகளாக அனுபவித்த போரின் போது, இறந்து போன ஆயிரக்கணக்கான மக்கள், இறந்துபோன இளைஞர், யுவதிகளையும் நினைவுகூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்த எங்களுக்கு அனுமதி தர வேண்டும். பாதுகாப்பு தர வேண்டும்.

நம்மவர்கள் ஒத்துழைத்தால் கிழக்குமண்ணிலிருந்து நாளாந்த அச்சுப்பத்திரிக்கைகளைக்கூட நாம் வெளியிடலாம். ஆனால் தற்போதைய காலகட்டத்தில் சகலருடையவீட்டிலும், அலுவலகத்திலும் கணணிகள் மாத்திரம்மன்றி, கைகளிலும் கையடக்க தொலைபேசிகளின் பாவனை அதிகரித்துக்காணப்படுகின்ற நிலையில் எமது மண்ணிலிருந்து நாளாந்தம் நிகழ்நிலை பத்திரிக்கை ஒன்றினைவெளியிடுவோம் என்ற எண்ணம் தோன்றியது.

இது தொடர்பாக எனது சகோதரன் துசரந்தனிடம் கேட்டேன்.ஓம் அண்ணன் விடுவோம் என்றான்.அதற்கமைய எமக்கு தெரிந்த வடிவமைப்பில் முதலாவது பத்திரிக்கையை 21.04.2020இல் வெளியிட்டு இன்றுவரை எந்தவொருநாளும் தவறாமல் பத்திரிக்கை வெளிவந்து கொண்டிருக்கின்றது.

பெரியமாற்றங்களுக்கு அத்திவாரம் இடுவது சிறுபுள்ளியே என்பார்கள். அதற்கமைய நாம் இட்ட சிறுபுள்ளி கிழக்குமாகாணத்தில் உள்ள பத்திரிக்கையாளர்கள் மாத்திரமின்றி வடமாகாணம் மலையகம் உட்பட பல்வேறு பத்திரிக்கையாளர்களின் பங்களிப்புடன் இன்று இலட்சக்கணக்கான வாசகர்களை தானதாக்கி நாளாந்த

ஓராண்டில் உங்களுடன்

தேசிய பத்திரிக்கைபோன்று வெளிவருகின்றது.

பல்வேறு சவால்கள் பொருளாதாரபிரச்சினைகளுக்கு மத்தியில் இதனைநாம் நாளாந்தம் வெளியிட்டுவருகின்றோம்.நிகழ்நிலைபத்திரிகைக்கு எமக்கு கிடைத்தபெரும்வரவேற்பு இன்று மாதாந்தம் இரண்டு அச்சுப்பிரதியினையும் வெளியிட்டுவருவதை அனைத்துவாசகர்களும் அறிவார்கள்.

இது உங்கள் குழந்தை என்ற நோக்கில் நமது பிரதே சமுகஆர்வலர்கள் தனவந்தர்கள் வர்த்தக உரிமையாளர்கள் எமக்கு உதவினால் சுபீட்சம் காலப்போக்கில் நாளாந்த அச்சுப்பிரதியாக வெளிவருவதற்கான சந்தர்ப்பங்களும் அதிகம் உண்டு. சொந்தப்பிரச்சினைகளுடன் போராடும்போதுகூட சமுகத்துக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற நோக்கில்தான் சுபீட்சம் நாளாந்தம் உங்கள் கண்களின் பார்வைக்கு கிட்டுகின்றது. முடிந்தால் எங்களுக்கு உதவிசெய்யுங்கள் அதன்ஊடாக சமுகத்திற்கு என்னால் சிறியபங்களிப்பினை செய்துள்ளேன் என்ற மனநிம்மதியினைப்பெறுவீர்கள்.

நாம் செய்யும் செயலால் ஒருவர் நிம்மதியடைந்தால் அதுவே தர்மம் என நம்புகின்றவர்கள்நாம்.எம்மால்முடிந்ததைபோட்டிபொறாமையின்றி மற்றவர்களுக்காக செய்வோம்.சுபீட்சம் போன்று காலப்போக்கில் கிழக்கில் பல்வேறு பத்திரிக்கைகள் வெளிவரவேண்டும் அதுவே சுபீட்சம் குழுமத்தின் ஆசை.

**அனைத்துவிடயங்களும்
மக்களுக்காகவே.**

வடமராட்சி அல்வாய் பகுதியில் வாள்வெட்டு;

அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடி பகுதியை சேர்ந்த உறவினர்களிடையே ஏற்பட்ட முரண்பாடு நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் வாள்வெட்டில் முடிவடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் முருகராசா கௌசிகன் (வயது 38) என்பவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். மேலும் அவரது சகோதரர்களான முருகராசா அகிலன் (வயது 36) முருகராசா வசிகரன் (வயது 31) காயமடைந்த அகிலனின் மகனானா அஜயன் (வயது 15) ஆகியோர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பில் பாதுகாப்பு அதிகரிப்பு

சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

ஏப்ரல் 21 தாக்குதல் நடாத்தப்பட்டபோது மட்டக்களப்பு மாவட்டமும் இலக்கு வைக்கப்பட்டதன் காரணமாகவும் இன்று குறித்த தாக்குதலில் படுகொலைசெய்யப்பட்டவர்கள் நினைவுதினம் அனுஸ்டிக்கப்படும் நிலையிலும் இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு பல்வேறு பகுதிகளிலும் பொலிஸார் வீதி சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதுடன் சந்தேகத்துக்குரிய வாகனங்கள் நபர்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுவருகின்றனர்.

இதேபோன்று இராணுவத்தினரும் விசேட ரோந்து பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுவருகின்றனர்.

சீயோன் தேவாலயத்திற்கு வந்த நாடாளுமன்ற

ஆண்டுகள் கடந்த போதிலும் முதல் தடவையாக தாக்குதல் நடந்த ஆலயத்தில் இந்த ஆண்டுதான் ஆராதனை நடாத்தவுள்ளதாக சீயோன் தேவாலயத்தின் பிரதம போதகர் ரொசான் மகேசன் தெரிவித்தார்.

இந்த தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களை நீதியின் முன்பாக நிறுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு அதனை அவர்கள் செய்வார்கள் என நினைக்கின்றேன் எனவும் போதகர் இதன்போது தெரிவித்தார்.

COLOMBO SHIPPING SOLUTIONS (PVT) LTD.
Galle Road, Colombo – 06, Sri Lanka.
Tel : +94 112 555 567
Whatsapp: +94 77 1766769
E-mail - ops@colomboshipping.com
web - www.colomboshipping.com

We provides a comprehensive range of shipping, logistics and marine services. With office in Colombo, Galle, Hambantota and Trincomalee, we cover all ports in the country, and handle any type of vessels and cargoes.

Services include:
Ship Agency Operations, Marine Services, Ship supplies, Total Project Logistics, Offshore Support Services, Crew Manning Services and Private Maritime Security Services.

பொலநறுவை-கொழும்பு கடுதி ரயில் சேவையினை மட்டக்களப்பிலிருந்து

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய் கிழமை இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். இதன்போது கருத்து வெளியிட்ட அவர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் பொலநறுவை முதல் கொழும்பு வரையிலான கடுகதி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த ரயில் சேவையானது பொறுநறுவையிலிருந்து அதிகாலை 3 மணிக்கு மணிக்கு புறப்பட்டு காலை 9 மணிக்கு கொழும்பினை வந்தடைகின்றது. அதேபோன்று கொழும்பிலிருந்து மாலை 3.15 மணிக்கு புறப்பட்டு %.15 மணிக்கு பொலநறுவையினை சென்றடைகின்றது.

இந்தநிலையில் அமைச்சர் அவர்களே அதிகாலை 3 மணிக்கு பொறுநறுவையில் இருந்து குறித்த ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதற்கு சற்று முன்னராக மட்டக்களப்பில் இருந்து ஆரம்பிக்க முடியுமா என்பதனை ஆராயந்து பாருங்கள்.

அதிகமான நேரங்களில் காலியான இருக்கைகளுடன்னேயே ரயில் கொழும்பினை சென்றடைகின்றது. பொலநறுவையில் இருந்து சேவையினை ஆரம்பிக்கின்றமை காரணமாகவே குறைந்தளவானர்கள் பயணிக்கின்றனர்.

எனவே பொலநறுவைக்கான ஆசனங்களை ஒதுக்கீடு செய்ததன் பின்னராக, பொறுநறுவையில் இருந்து குறித்த ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதற்கு சற்று முன்னராக மட்டக்களப்பில் இருந்து ஆரம்பிக்க முடியுமா?

ஏனெனில் தற்போது மட்க்களப்பிலிருந்து கொழும்பிற்கு வரும் ரயில் பயணிப்போர் இரண்டு நாட்களாவது கொழும்பில் தங்கியிருந்து தங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. எனினும் காலை 9 மணிக்கு கொழும்பிற்கு வருகைதந்தால், தங்களது கடமைகளை பூர்த்தி செய்துகொண்டதன் பின்னர் மீண்டும் அன்றைய தினம் மாலையே மட்டக்களப்பிற்கு திரும்பி செல்ல முடியும்.

நான் பொறுநறுவை - கொழும்பிற்கான ரயில் சேவைக்கான நேரத்தினை மாற்றுமாறு கூறவில்லை. அந்த நேரத்திற்கு முன்னராக மட்டக்களப்பிலிருந்து ஆரம்பிக்க முடியுமா என்றே கேட்கின்றேன். என்றார்.

இதற்கு பதிலளித்த போக்குவரத்து அமைச்சர், அதிகாரிகளுடன் பேசிவிட்டு உரிய பதிலினை வழங்குவதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் கருத்து வெளியிட்ட இரா.சாணக்கியன், அதிகாரிகள் இதனை செய்வதற்கு தயாராக இருக்கின்றனர். எனவே வெள்ளோட்ட முறையில் இதனை செய்து பார்க்க முடியுமா? எனவும் கேள்வி எழுப்பியிருந்தார்.

மே தின கூட்டம், பேரணிகளுக்கு தடை

கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டு மையம் தீர்மானித்துள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா கூறினார். இலங்கையில் தற்போது அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்று நிலைமை காரணமாக எந்த ஒரு மே தின கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்த வேண்டாம் என கொவிட்19 பரவலை கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டு மையம் கேட்டுக்கொண்டுள்ளது.

மட்டு.விற்கு மே மாதம் ஜனாதிபதி வருகிறார்

மே மாதம் முதற்பகுதியில் மட்டக்களப்பிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது மட்டக்களப்பு மக்களின் பிரச்சினைகளை நேரில் சென்று கேட்டறிந்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

மேலும் ஜனாதிபதியின் இவ்விஜயத்தின் போது அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். ஜனாதிபதி விஜயத்திற்கான முன் ஏற்பாடுகள் தொடர்பாக விசேட கூட்டம் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்த் தலைமையில் ஜனாதிபதி இணைப்பாளர் இசுறுஹேரத்தின் பங்குபற்றுதலுடன் நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது ஜனாதிபதி பாதுகாப்புப் பிரவு அதிகாரி மேஜர் எரிக் குனசேகர, இராஜங்க அமைச்சர் வியாழேந்திரனின் இணைப்புச் செயலாளர் ரோஸ்மன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, பிரதம கணக்காளர் கே. ஜெகதீஸ்வரன், உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன், மாவட்ட பெறியியலாளர் வீ. சுமன், நிர்வாக உத்தியோகத்தர் கே. தயாபரன், கணக்காளர் எம். வினோத், மாவட்ட தகவல் அதிகாரி வீ. ஜீவானந்தன் உட்பட ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு மற்றும் ஊடகப் பிரிவு உத்தியோகத்தர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனரர்.

மட்டக்களப்பு ஊறணி விபத்தில் 4 வாகனங்கள் சேதம்; மூன்று பேர் காயம்

சேதமடைந்துள்ளதுடன் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர். இரண்டு முச்சக்கர வண்டிகள் மற்றும் இரண்டு கெப் ரக வாகனங்களும் ஒன்றோடொன்று மோதியுள்ளன.

வாவியோரமாக வேகமாகச் சென்ற முச்சக்கர வண்டியும் கெப் வாகனம் ஒன்றும் மோதியதையடுத்து மேலும் இரண்டு வாகனங்கள் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தினையடுத்து இவ்வீதியில் வாகன போக்குவரத்து சற்று நேரம் தடைப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த விபத்தில் முச்சக்கர வண்டிகள் பலத்த சேதமடைந்துள்ளன.

மட்டக்களப்பு பொலிஸார் இச்சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கட்சி பிளவுகளுக்கு ஏற்ப மாகாணத்தின் வளர்ச்சிக்கு நிதி

புத்தாண்டு நிகழ்வு திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இடம் பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து பேசிய ஆளுநர்,

இப்போது நம் மாகாணத்தின் காடுகள் பாதுகாக்கப்படுகின்றன, விவசாய நிலங்கள் பாதுகாக்கப்படுகின்றன, தொல்பொருள் இடங்கள் அழகாக இருக்கின்றன, அனைவருக்கும் வலுவான விடயம் என்னவென்றால், கிழக்கு மாகாணத்தில் உள்ள மூவின சிங்கள, தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் வலுவான அமைதியிலும் நல்லிணக்கத்திலும் உள்ளனர். ஆனால் நாம் பொருளாதார ரீதியாகவும் வளமாகவும் சமமாகவும் இருக்க விரும்புகிறோம்.

மக்களுக்கு எத்தனை பிரச்சினைகள் உள்ளன என்பதை நாம் புரிந்துகொள்வோம். அவர்களின் வேலை மற்றும் பொருளாதார வாய்ப்பு இல்லாததால் அந்த பிரச்சினைகள் போன்ற பல பிரச்சினைகள் உள்ளன.

மேற்கு மாகாணத்தில் வறுமைக்கும் கிழக்கு மாகாணத்தில் வறுமைக்கும் இடையே பெரிய வித்தியாசம் உள்ளது. எனவே இந்த பிரச்சினைகளுக்கு இந்த மாகாணத்திற்குள் தீர்வு காணலாம். எங்கள் மாகாணத்தைப் பாதுகாக்கவும் மாகாணத்தின் செழிப்பைப் பாதுகாத்து வளர்த்துக் கொள்ளும்போது இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். நாங்கள் கலந்துரையாடியவை இந்த ஆண்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்படும் என்று நம்புகிறோம். எங்கள் கிழக்கிற்கு தனித்துவமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஒரு குழுவையும் நியமித்துள்ளோம். இந்த குழுவிற்கு திரு. நானாயக்கார தலைமை தாங்கினார், டாக்டர் குணருவன் மற்றும் அலுவலகத்தின் முழு ஆதரவோடும் தொடர்ந்தார்கள்

இந்த கமிட்டி மூலம் எங்களுக்கு கிடைத்த முறைப்பாடுகளை கேள்விகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து, அவர்களுக்கு நல்ல பரிந்துரைகளை வழங்கி, இந்த மாதத்தில் குழுக்கள் மூலம் ஒரு நல்ல அறிக்கையைப் பெறுவோம். இந்த பரிந்துரைகளைச் செயல்படுத்தவும், அவை செயல்படுகின்றனவா என்பதைப் பார்க்கவும் எங்களுக்கு ஒரு பொறுப்பு உள்ளது.

கடந்த காலங்களிலும் நியாயமற்ற நிதி ஒதுக்கீட்டை நாங்கள் கண்டிருக்கிறோம். அவற்றையும் தவிர்க்க முயற்சிக்கிறோம். எந்தவொரு இன அல்லது கட்சி வேறுபாடுகளோ அல்லது மத வேறுபாடுகளோ இல்லாமல் நிதி ஒதுக்கீடு மிகவும் வெற்றிகரமாக இருந்தது. உண்மையில், எங்கள் மாகாணத்தில் இனப்பிரச்சனைகள் எதுவும் இல்லை. பகிர்வு சிக்கல்கள். அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க நாம் புரிதலுடன் செயல்பட வேண்டும் என்றார்.

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SwissLife Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி

Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்

முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923

n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS

YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே » பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி » சட்டக் காப்புறுதி

SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலைமைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

Aaran Ayurveda
& Wellness Massage

Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaran-ayurveda.ch
Krankenkasse Anerkannt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயராத உழைப்பில் சுபீட்சம்

அயராத உழைப்பில் ஆண்டொன்றினை எட்டிவிட்டாய்
இன்னல்கள் கடந்து இலங்கையில் அச்சுப்பிரதியானாய்
ஈடில்லா உன்சேவை என்றென்றும் தொடரட்டும்
உலகம்முழுவதும் நிகழ்நிலை பத்திரிக்கை சுற்றி வரட்டும்.
எல்லோர் மனதிலும் சிம்மாசனமிட்டு அமர்ந்தாலும்
ஏச்சுக்களும் பேச்சுக்களும் வருவதை சகித்து கொண்டாய்
மக்களின் சேவையே மகேசன் சேவையென்றும்
மண்ணின் புகழ்பாடி சுற்றிவருகின்றாய்.
உன்முயற்சிகள் மென்மேலும் மேன்மைபெற
ஊடகத்துறையினை மெருகூட்டிவரும்
உன்புகழ் என்றென்றும் ஓங்கிடவே
பல்லாண்டுகள் சேவை தொடர வாழ்த்துக்கள்.
ஏழை எளிய மக்களின் துயர்துடைத்து
சுதந்திரமாக சுபீட்சம் உலாவர
சுற்றவரும் மற்றவரும் புகழ
வாழ்க பல்லாண்டு.

தேவா.

தமிழ் மக்களின் உணர்வோடு இரண்டறக்கலந்த சுபீட்சம்

தமிழ்மக்களின் உணர்வோடும் உரிமையோடும் இரண்டறக்கலந்து தாய்நிலத்தின் செய்திகளை தரணியெங்கும் பரவச்செய்து 01வது அகவையில் தடம்பதிக்கும் சுபீட்சத்துக்கு வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

தமிழ்பேசும் நல்லுலகின் மூச்சாக, வீச்சாக வாய்மையை புடம்போட்டு எடுத்தியம்பி அன்றாடச்செய்திகளை மட்டுமல்லாது வாழ்வியல், அரசியல், பொருளாதார, சமகால மற்றும் தமிழினத்தின் வரலாற்று உண்மைகளை நடுநிலை தவறாது தெரிவித்து வருவதோடு தமிழ் நெஞ்சங்களை உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்தி நீதிக்கும் உண்மைக்கும் என்றுமே அழிவில்லை என்பதை உணர்த்தி அதற்காக பணியாற்றுபவன் சுபீட்சம்.

இப்போதைய நவீன விஞ்ஞான தொழில்நுட்ப உலகத்தின் தேவைக்கும் வேகத்திற்குமேற்ப உடனுக்குடன் விரைவாகச் செய்திகளை வழங்குவதில் சுபீட்சத்தின் பங்கு காத்திரமானது. தமிழ்மக்களின் நீதியான உண்மையான நிலைமையினை உலகு எங்கும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக தனது குரலை ஓங்கி ஒலித்து தமிழ்றகாக தவழ்ந்துவரும் சுபீட்சத்திற்கு கரம் கொடுத்து உரமிட வேண்டியது நமது தமிழ்மக்களினது தர்மீகக்கடமையாகும்.

புதிய தலைமுறையினருக்கும் எமது மொழியின் தொன்மையையும் தமிழினத்தின் வரலாற்றினையும். பெருமைகளையும் தமிழினம் கடந்துவந்த பாதைகளையும் மற்றும் காலத்தின் தேவைகளையும் சுபீட்சம் தெரிவிக்கும் என்ற உறுதியான எதிர்பார்ப்புடன் இன்னும் பல்நூற்றாண்டு சிறப்பற வாழ்ந்து வளர்க என வாழ்த்தி நிற்கின்றோம்.

யே.யாட்சன் பிகிறாடோ
குழுத்தலைவர்
'மெசிடோ நிறுவனம்'
மன்னார்

'சுபீட்சம்' தொடர்ந்து சுபீட்சம் அடைய வாழ்த்துக்கள்

இந்த நவீன உலகத்தில் வாசகர் வட்டம் குறைந்து வருகின்றபோதும் வளரும் தமிழின சமூகம் தனது மொழியை மட்டுமல்ல இலங்கையின் கிழக்குப்பகுதியில் எந்தவித அச்சுப்பதிப்பு பத்திரிகை அற்ற நிலையை உணர்ந்து கிழக்குப் பகுதியிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் சிரேஷ்ட ஊடகவியலாளரும் எனது ஊடக நண்பனுமாகிய வேதா தனது வேலைப்பழுவையும் வருமானத்தையும் கவனத்தில் எடுக்காது தனது மண்ணின் செய்திகளை உடனுக்குடன் மக்கள் மத்தியில் கொண்டுசெல்ல வேண்டும் என்ற நல்ல நோக்கம் கொண்டு; சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகை ஆரம்பித்து ஓராண்டு நிறைவடைந்து இன்றுடன் இரண்டாவது அகவையில் தடம்பதிப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

உலகில் பல்லாயிரக்கணக்கான வாசகர்களைக்கொண்ட நமது இந்த சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையானது ஆரம்பத்தில் இலங்கையின் கிழக்குப்பகுதி செய்திகளை மட்டுமே தாங்கிவந்தபோதும் வடபகுதி மக்களும் இவ் பத்திரிகையை கவாந்தமையால் வடக்கு செய்திகளையும் உள்ளடக்கி ஒரு வருடத்துக்குள் பலரின் பாராட்டுக்களையும் வாசகர் தொகையையும் பெற்றுள்ளது என்பது மறுக்கமுடியாது.

இதன் வெளிப்பாடே அன்மைகாலமாக இவ் சுபீட்சம் பத்திரிகை மாதம் இரு தடவையாக அச்சுப்பதிப்பாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. வாசகர்களால் பாராட்டப்படும் இவ் சுபீட்சம் பத்திரிகை தொடர்ந்து புதிய தலைமுறையினருக்கும் எமது மொழிப்பற்றையும் வாசிக்கும் பழக்கத்தையும் தமிழ்பகுதிகளின் செய்திகளையும் நடுநிலை தவறாது உடனுக்குடன் தொடர்ந்து வெளிக்கொணர வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன். வாழ்க வளமுடன்.

வாஸ் கூஞ்ஞ
சிரேஷ்ட ஊடகவியலாளர்
மன்னார்

தேர்தல் முறைமை குறித்து சிறுபான்மை கட்சிகளுடன் இ.தொ.கா. பேச்சு

(க.கிஷாந்தன்)

தேர்தல் முறைமை தொடர்பில் அனைத்து சிறுபான்மை கட்சிகளிடமும் ஆலோசனைகள் பெறப்படும். அதன்பின்னர் எமது திட்டம் அரசாங்கத்திடம் கையளிக்கப் படும்என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

சுய தொழில் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு சந்தை வாய்பை ஏற்படுத்தும் நோக்கில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் தலைமையில், பிரஜாசக்தி செயற்திட்டத்தின் பணிப்பளார் பாரத் அருள்சாமியின் ஏற்பாட்டின் மூலம் பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாச பிரயாணிகள் மற்றும் முதலீட்டாளர்களை கவரும் இலக்காக கொண்டு நுவரெலியா பருவகால கொள்வனவு தொகுதியில் பிரஜா ஷொப்பிங் விற்பனை குடில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சித் தலைவர்களுக்கான கூட்டம் அலரிமாளிகையில் நடைபெற்றது.

இதன்போது மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்தும் முறைமை தொடர்பில் அரசாங்கத்தால் இரு யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

மேற்படி யோசனைகள் சிறுகட்சிகளுக்கு பாதகமாக அமையும் என்பதால் அவற்றை இ.தொ.கா. நிராகரித்திருந்தது. இது தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு கூறினார்.

சிறுபான்மையின மக்களுக்கு எதிராக திட்டம் முன்வைக்கப்படவில்லை. அரசாங்கத்தின் தரப்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்டு அவை குறித்து எமது அபிப்ராயம் கோரப்பட்டது.

அதன்போது திட்டங்களை ஏற்கமுடியாது என நாம் குறிப்பிட்டோம். இதனையடுத்து எமது திட்டத்தை முன்வைக்குமாறு கோரினர். எனவே, இன்னும் ஒரிரு நாட்களில் அனைத்து சிறுபான்மையின் கட்சிகளையும் தொடர்புகொண்டு, நியாயமான திட்டத்தை முன்வைப்போம் என்றார்.

காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு

(குகதர்சன்)

வாகரை பிரதேச செயலாளரின் அயராத தொடர் முயற்சியினால் பால்சேனை மற்றும் கதிரவெளி மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் சு.ஹரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற செயலக காணிக் கிளை உத்தியோகத்தர்கள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது முதற் கட்டமாக 100 பயனாளிகளுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் பிரதேச செயலாளரினால் வழங்கி வைக்கப்பட்டது.

எதிர்வரும் வாரங்களில் ஏனைய கிராம பிரிவுகளுக்கும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்படும் என பிரதேச செயலாளர் சு.ஹரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற தொல்பொருள் பாரம்பரியம் தொடர்பான செயலமர்வு

தொல்பொருள் பாரம்பரியம் தொடர்பான விழிப்புனர்வு செயலமர்வு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிகாரிகளுக்கும் இராணுவ உத்தியோத்தர்களுக்குமாக தொல்பொருளியல் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட காணிப்பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜினி முகுந்தன் தலைமையில் நேற்று மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது தொல்பொருளியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மானதுங்க பிரதம அதியாகக் கலந்து கொண்டு தொல்பொருள் பாரம்பரியம் தொடர்பான விளக்கமளித்தார்.

மேலும் தொல் பொருள் சின்னங்களைப் பாதுகாத்தல் எனும் தலைப்பில் தொல்பொருளியல் திணைக்கள பதில் மேலதிக பணிப்பாளர் பிரசன்ன பீ. ரத்நாயகவும் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான தொல்பொருள் திட்டம் தொடர்பாக ஆய்வு உத்தியோகத்தர் திருமதி முத்து தென்னகோன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு விளக்மளித்தனர்.

இவ்வழிப்புனர்வு செயலமர்வில் மட்டக்களப்பு மாநகரசபை மேயர் தியாகராஜா சரவணபவான், மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அதிதியட்சகர், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர்களும், கிழக்கு மாகாணத்திலுள்ள இராணுவ பிரிவுகளுக்குமான கட்டளை அதிகாரிகளும், மாவட்ட தொல்பொருள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

மகளிர் தினத்தை முன்னிட்டு கிண்ணியா பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் கிண்ணியா பிரதேச செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

இதன் போது ரெக்டோ அமைப்பின் திட்ட முகாமையாளர் ஏ.எஸ்.தாணீஸிடமிருந்து தி/குறிஞ்சாக்கேணி மகளிர் மகா வித்தியாலய மாணவிகள் ஏ.பாத்திமா சிஹ்னாஸ், எம். றிஸ்கா எம்.. அனா ஆகிய மாணவிகள் வெற்றி பெற்று சான்றிதழ்கள் பெற்றுக் கொண்டதை படத்தில் காணலாம்.

படங்கள்:- எப்.முபாரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிப்பத்திரமின்றி மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் சரீரப்பிணையில் விடுவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

கடற்தொழில் அனுமதிபத்திரமின்றி மீன்பிடியில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டு ஒரு படகில் மீன்பிடியில் ஈடுபட்ட மூவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது தலா ஐம்பதாயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மீன்பிடி உபகரணங்களும் பிணைமுறியில் விடுவிக்கப்பட்டது.

கடந்த 10 ஆம் திகதி மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் ஒரு படகில் சென்று அவர்கள் ஈடுபட்ட சுறுக்குவலை மீன்பிடிக்கான கடற்தொழிலுக்கான அனுமதிப்பத்திரமின்றி தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

மன்னார் தேவன்பிட்டி கடற்பரப்பில் இவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் இவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு மன்னார் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் கைதுசெய்யப்பட்ட மீனவர்களில் ஒருவர் கொரோனா தொற்றுநோய்க்கு உள்ளாகியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டமையால் இவர் 23ந் திகதிவரை தனிமைப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய இருவரையும் இவர்கள் மீன்பிடிக்காக ஈடுபடுத்தப்பட்ட உபகரணங்களையும் கடற்தொழில் திணைக்கள பரிசோதகர் வாஹீட் திங்கள் கிழமை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினார்.

நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட இரு மீனவர்களையும் தலா ஐம்பது ரூபா சரீரப்பிணையிலும் மற்றும் இவர்கள் பயண்படுத்திய கடற்தொழில் உபகரணங்களையும் ஐம்பது லட்சம் ரூபா பிணைமுறியிலும் நீதவான் பெ.சிவகுமார் விடுவித்ததுடன் இவ் வழக்கு விசாரனையை எதிர்வரும் 23.04.2021 வரை ஒத்திவைத்துள்ளார்.

இவ் வழக்கின் சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரனி செ.டினேஸ் மன்றில் முன்னிலையாகி இருந்தார்.

கிழக்கு மாகாணத்திற்கு 34 தாதிய உத்தியோகத்தர்கள் நியமனம்

(அப்துல்சலாம் யாசீம்)

கிழக்கு மாகாணத்தில் புதிதாக 34 தாதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக கிழக்குமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் வெற்றிடமாக காணப்பட்ட இடங்களுக்கு தேவைக்கேற்ற விதத்தில் தாதியர்களை அனுப்பி வைத்துள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதே வேளை கிராமப்புற வைத்தியசாலைகளுக்கு தாதியர்கள் நியமிக்கப்படவில்லை எனவும் குறிப்பாக மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் இரண்டு தாதியர்கள் மாத்திரமே கடமையாற்றி வருவதாகவும் இதனால் நோயாளர்கள் தமது சேவைகளை பெற்றுக்கொள்ள செல்கின்றபோது தாமதம் ஏற்படுவதாகவும் குற்றம் சுமத்துகின்றனர்.

அத்துடன் கிண்ணியா-மூதூர் வைத்தியசாலைகளுக்கு தாதியர்கள் அதிகளவில் இருப்பதாகவும் தெரியவருகின்றது.

ஆனாலும் அதி கஷ்ட பிரதேச வைத்தியசாலைகளுக்கு தாதியர்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஈராண்டு ஈஸ்டர் குண்டு தாக்குதல் நினைவு இன்று

இரண்டு வருடங்கள் கடந்தன இன்றே!
ஈஷ்டர் குண்டுத்தாக்குதல் இலங்கையிலே!
இஷ்லாத்தின் பெயரால் எமது மண்ணிலே!
எட்டு இடத்தில் வெடித்த பேரவலம்!
புனித கத்தோலிக்க கிறிஷ்தவஆலயங்கள்!
நட்சத்திர கொழும்பு விடுதிகள் எல்லாம்!
நஞ்சுக்குண்டைக்காவிய நயவஞ்சகர்கள்!
பிஞ்சுக்குழந்தைகள் பெரியவர்கள் பெண்கள்!
வெள்ளைக்காற வெளிநாட்டு பிரஜைகள்!
கொள்ளிவைத்த கொலை வெறி நாளிது.!

மட்டக்களப்பில் சென் ஜோண் தேவாலயமும்!
மரணக்குண்டால் மடிந்த உயிர்கள் ஏராளம்!
இரத்த வெள்ளம் உரத்த பெரும் கூக்குரல்!
உடல்கள் சிதறி உறவுகளை நாம் இழந்தோம்!
உலகப்பயங்கர வாத இஷ்லாமிய அமைப்பு.!
கலகப் பேர்வழிகளின் கண்மூடித்தன செய்கை
காத்தான்குடி, கல்முனைக்குடி, சம்மாந்துறை!
கொழும்பு, குருநாகல், இலங்கையில் எல்லாம்
இஷ்லாம் மத இளைஞர் யுவதி வர்தகர்கள்என!
ஏராளம் பேரை கைதுசெய்ய வைத்த நாளிது!

இன்னும் விசாரணை இப்பவும் தொடர்கிறது!
ஆணைக்குழு அறிக்கை கிடப்பில் கிடக்கிது!
ஆயினும் அரசுகள் நீதியை தரவில்லை!
ஆயர்கள் கண்டணம் அடிக்கடி உரைகள்!
பேயர்களாக மாண்ட உறவினர்கள் உறவுகள்!
பெருமூச்சு விட்டு பேதலித்து வாழ்கிறார்கள்!
இரண்டு வருடங்கள் இப்படித்தான் கழிந்தது!
இன்றைய நாளிலும் இறந்தவர்களுக்காக!
இறைவனை வேண்டி அஞ்சலி செய்வோம்!
எங்களின் நாட்டினில் அநீதிக்கு நீதியில்லை!

-அம்பிளாந்துறையூர் அரியம்-

'ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதில் மட்டு.அரசினர் ஆசிரியர் கலாசாலை பிரதான இடத்தில்'

(ரக்ஸனா)

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் பிரதான இடத்தை வகிப்பதாக அக் கலாசாலை அதிபர் எம்.சி. ஜுனைட் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று இரண்டாம் அலை பரவலுக்குப் பின்னர் அக் கலாசாலையில் கல்வி பயிலும் 2020 -2021 கல்வி ஆண்டுக்கான ஆசிரிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் அவர் உரையாற்றினார்.

கலாசாலையின் ஆசிரிய மாணவத் தலைவி கம்ஷியா லங்கேஸ்வரன் தலைமையில் ஆசிரிய கலாசாலை கேட்போர்கூடத்தில் திங்களன்று நிகழ்வுகள் இடம்பெற்றன.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய கலாசாலை அதிபர் ஜுனைட்;

2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தவொரு ஆசிரியரும் ஆசிரியர் பயிற்சி பெறாமல் மாணவர்களுக்குக் கற்பிக்கக் கூடாது என்ற கல்வி அமைச்சின் உத்தரவுக்கிணங்க மட்டக்களபர்பு அசிரியர் கலாசாலையிலும் அநேக ஆசிரிய மாணவர்கள் தங்களது பயிற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

இலங்கையிலுள்ள எட்டு ஆசிரியர் கலாசாலைகளிலே மட்டக்கசளப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை பிரதான இடத்ததை வகிக்கின்றது.

எனினும் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கலாசாலை மூடப்பட்டிருந்த சமயத்திலும் எமது கலாசாலை மாணவர்களுக்கு ஒன் லைன் மூலமான கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமே இருந்தன.

இனி வரும் காலங்களில் நேரடிக் கல்வி தொடரும்.

ஆரம்பக் கல்வித் துறையில் 150 ஆசிரிய மாணவர்களும் சமூக விஞ்ஞானத்துறை 18 முதல்மொழி 15 றோமன் கத்தோலிக்கம் 18 ஆங்கிலத்துறை 7 விஞ்ஞானம் 11 ஆகியவற்றுடன் இரண்டாம் வருட மாணவர்கள் 52 பேர் உள்ளடங்கலாக மொத்தமாக 219 ஆசிரிய மாணவர்கள் தமது பயிற்சியை தொடர்ந்து கொண்டுள்ளார்கள்.

01.09.1945ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை சுமார் 75 வருடங்ககுப் பின்னரே ஓரளவு அபிவிருத்தி கண்டுள்ளது. இக்கலாசாலை பல சவால்களோடு இயங்கினாலும் ஆசிரிய மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதில் வெற்றி கண்டுள்ளது என்றார்.

நிகழ்வில் பிரதி அதிபர் சி. மொரின் உப அதிபர் கலாநிதி எம்.பி. ரவிச்சந்திரா உட்பட விரிவுரையாளர்கள் நிருவாக அதிகாரிகள் ஆசிரிய மாணவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு அறிமுக உரைகளை நிகழ்த்தினர்.

முன்பள்ளி பாடசாலைகள் இன்மையினால் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்பு

(துறையூர் சஞ்சயன்)

பட்டிருப்பு கல்வி வலய போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வேத்துச்சேனை மற்றும் சுரவணையடியூற்று கிராமங்களில் ஆரம்ப முன்பள்ளிப் பாடசாலைகளை அமைத்துத்தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது;

போரதீவுப்பற்று செயலகப் பிரிவுக்குட்பட்ட குறித்த இரு கிராமங்களிலும் முன்பள்ளி பாடசாலை இற்றைவரை உருவாக்கப்படாமையினால் மாணவர்களின் ஆரம்ப கற்றல் நடவடிக்கைகள் பாதிப்புறுவதாகவும், கற்றலை தொடராத நிலை காணப்படுவதாகவும் பெற்றோரால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வேத்துச்சேனை கிராமத்தில் மாணவர்கள் தொகை குறைவாக உள்ளதை கவனத்திற்கொண்டு முன்பள்ளி அமைக்கப்படாமையினால் ஐந்தாறு வயதாகியும் கற்றலைத் தொடராத, தொடரத் தயங்கும் நிலையும் ஆரம்ப பிரிவு பாடசாலைக்கு செல்லாத துரதிர்ஷ்ட நிலையும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வேத்துச்சேனை கிராமம் தீவு போன்று காணப்படுவதனால், தொடர்ச்சியான மழை காலங்களில் கிராமம் வெள்ள நீரினால் மூழ்குவதுடன், பொதுமக்கள் வள்ளங்கள் தோணிகள் மூலமே பிற கிராமங்களை நாடுவதாகவும், முன்பள்ளி கிராமத்தில் இருக்குமாயின் வேறு பிரதேசங்களுக்கு செல்ல வேண்டிய தேவையில்லையெனவும்பெற்றோர்கள் காட்டமாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே, கிராம மக்களினதும் மாணவர்களினதும் தேவை கருதி மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளிக்கல்வி ஆரம்பக்கல்வி அறநெறிப் பாடசாலைகள் கல்விச்சேவைகள், பாடசாலை உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் குறித்த இரு கிராமங்களிலும் பாடசாலைகளை அமைத்துத் தருவதற்குரிய ஏற்பாடுகளை செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நமது நாயகர்களின் அபிவிருத்தி என்பது கிழக்கில் பௌத்தத்தை அபிவிருத்தி செய்வதே

துதி மோகன்)

அபிவிருத்தி நாயகர்களே உங்கள் அபிவிருத்தி பௌத்த மத அபிவிருத்தி என்பதனை மக்கள் இப்போது தான் உணர்ந்துள்ளனர். செங்கலடி ஈரளக்குளம் புளுட்டுமானோடை பௌத்த மத்தியஸ்தானம் 400 ஏக்கர் விவகாரத்தில் கட்சி பேதமின்றி தமிழர்களின் பூர்விகம் எனும் தொனியில் ஓரணியில் ஒன்று திரளவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் க.மோகன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் குழப்ப நிலைமைகள் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்சிப் போட்டி, அதிகாரப் போட்டி என்பவற்றால் மாநகரத்தின் அபிவிருத்தி வேலைகளை முடக்கினால் பாதிக்கப்பட போவது எமது மாநகரமாகும். அண்மைகாலமாக மாநகர அதிகாரங்களை கைப்பற்றுவதற்காக நடாத்தப்பட்ட ஆடுபுலி ஆட்டத்தை மக்கள் அவதானித்து கொண்டுதான் இருக்கின்றார்கள். இப்போது புதிய பரிமானத்தில் இன்னுமொரு போட்டி நிலை உருவாகியுள்ளது. இது ஆரோக்கியமான செயற்பாடு அல்ல, ஒவ்வொரு நகர்வுகளையும் மக்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர் இதில் பின்னால் இருந்து யார் பகடைக் காய்களை உருட்டுகிறார்கள் என்பதனையும் மக்கள் அறிவார்கள். எனவே நமது மாவட்டத்தையும், மாநகரத்தையும் நேசிக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் பொறுப்பு வாய்ந்தவராக இருக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி காலத்தில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்த மு.று.தேவநாயகம் ஒரு பௌத்த துறவியை அடித்து விரட்டினார். காரணம் செங்கலடி பிரதேச செயலக பிரிவில் ஈராக்குளம் புலுட்டு மானோடை எனும் கிராமத்தில் பௌத்த விகாரை அமைக்க முயற்சித்ததற்காகவே அந்த சம்பவம் நடந்தது. அது வரலாறாகப் பதியப்பட்டுள்ளது. உங்கள் காலத்திலே இவைகள் அமைக்கப்பட்டதாக வரலாறு இருக்கும். அபிவிருத்தி மகான்களே உங்கள் எண்ணம் உங்களை கொல்லவில்லையா? செங்கலடி ஈரளக்குளம் புளுட்டுமானோடை 400 ஏக்கர் விவகாரத்தில் கட்சி பேதமின்றி தமிழர்களின் பூர்விகம் எனும் தொனியில் ஓரணியில் ஒன்று திரள அனைவரையும் அழைக்கின்றோம்.

தேவையற்ற விடயங்களை தூக்கி பிடிக்கும் முகநூல் தோழர்களே! நீங்களுமா மரத்துப் போனீர்கள்? முள்ளந்தண்டு முறிந்து போன மட்டக்களப்பு மாவட்ட அரசியல்வாதிகளும், அடக்கி வாசிக்கும் ஊடகங்களும் ஏன் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் பௌத்த மத்தியஸ்தானம் வேலைத்திட்டம் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை? என்று கேள்வியெழுப்பியுள்ளார்.

ஓட்டமாவடியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் சிலாபத்தில் மரணம்



(எச்.எம். எம்.பர்ஸான்)

மட்டக்களப்பு - ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீராவோடை பிரதேசத்தைச் சேர்ந்த அப்துல் சலாம் மஹ்ரூப் (வயது 54) எனும் பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று செவ்வாய்க்கிழமை மரணமடைந்துள்ளார்.

இவர் சிலாபம் பல்லம பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தராக கடமை புரிந்து வந்துள்ள நிலையிலேயே மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான குறித்த பொலிஸ் உத்தியோகத்தரின் உடல் மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சேதன விவசாயச் செய்கையாளர் போட்டியில் முதலாம் இடம்

(வாஸ் கூஞ்ஞ)

வட மாகாணத்தின் விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் நடாத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்கான சிறந்த சேதன விவசாயச் செய்கையாளர் போட்டியில் மன்னார் மாவட்டத்தில் முதலாம் இடத்தை அருட்பணியாளர் சீமான்பிள்ளை ஜெயபாலன் அடிகளார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கான பாராட்டுகளும் விருதும் திங்கள் கிழமை யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள வடமாகாண விவசாய திணைக்களத்தில் வட மாகாண ஆளுநர் திருமதி பி.எவ்.எம்.சாள்ஸ் அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவ் அருட்பணியாளர் மன்னார் ஆயர் இல்லத்தின் பொருளாளரும் மன்னார் தீவில் கைவிடப்பட்டிருந்த உவர் நிலத்தில் நாற்பது வருடங்களுக்குப் பின் கடந்த காலப்போகத்தில் நெற்செய்கை செய்து நல்ல விளைச்சலை பெற்றதுடன் மன்னார் தீவிலும் உவர் நிலத்தில் நெற்செய்கை செய்யமுடியும் என்பதையும் எண்பித்துகாட்டியவர் வன்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம் என்பது கட்டணம் செலுத்தப்படாத விளம்பரம்

38வது சபை அமர்வில் தவிசாளர் ஜெயசிறில் தெரிவிப்பு!

(சகா)

எம்மீதான விமர்சனத்தை வரவேற்கிறோம். விமர்சனம் என்பது கட்டணம் செலுத்தப்படாத விளம்பரம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. 20லட்சருபா கடனோடு பொறுப்பேற்றசபையை இன்று 46லட்சருபா இருப்போடு வைத்துள்ளோம் .

இவ்வாறு காரைதீவு பிரதேசசபையின் 38ஆவது சபை அமர்விற்கு தலைமைவகித்துரையாற்றிய தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் பெருமையோடு தெரிவித்தார்.

இந்த 38வது அமர்வு நேற்று சபாமண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:

மயானத்திற்குச் செல்வோரையும் பொலிசார் தலைக்கவசத்திற்காக பிடிக்கின்றனர் அதனை நான்செய்விக்கிறேன் என்றும் இங்கு கூறப்பட்டது. இந்தவாரம் மட்டும் காரைதீவில் 28லட்சருபா களவுபோயிருக்கிறது. ஆங்காங்கே மாவா கஞ்சா சாராயம் விற்கப்படுவதாக தகவல்கள் கிடைக்கின்றன. இந்நிலையில் சட்டத்திற்கு மதிப்பளித்து எமது பாதுகாப்பையும் உறுதிசெய்துகொள்ளவேண்டும்.

ஒரு கட்சியியின் அமைச்சரொருவருக்கு பகிரங்கமாக அமைப்பாளராகவிருக்கும் ஊடகவியலாளரொருவர் எமது சபைக்குவராமலே பொய்யான செய்தியை போட்டு எமக்கு சேறுபூசமுனைந்துள்ளார். இருப்பினும் அவரை மன்னித்துவிட்டோம். ஆனால் ஒருகட்சியின் அமைப்பாளரான அவரை ஊடகவியலாளராக நாம் அனுமதிக்கமுடியாது.

எந்தக்கஸ்டம் வந்தாலும் மக்களுக்கு சேவையாற்றுவதே எனது பணி. உங்களுக்கு பிடிக்கவில்லையென்றால் எழுத்துமூலம் அறிவித்தால் விடைபெற நான்தயார். உங்களது பிரச்சினைகளை பாரத்தை என்னிடம் கொட்டித்தீர்க்கிறீர்கள். எனது பாரத்தை யாரிடம் கொட்டுவது?

இந்த 38மாதங்களும் சபையால் எதுவுமே செய்யவில்லையென்று பல உறுப்பினர்களும் ஆதங்கப்பட்டீர்கள்.எனினும் நீரிணைப்பு மின்சாரம் வீதி என பல அபிவிருத்திகள் இடம்பெறாமலில்லை. வெறும்சபையை 20லட்சருபா கடனுடன் என்னிடம் ஒப்படைத்தார்கள். ஆனால் நான் பலஇடங்களுக்கும் சென்று பிச்சைஎடுப்பதுபோன்று நிதியீட்டங்களைப்பெற்று 3வருடநிறைவில் இன்று 46லட்சருபாவை சேமிப்பில் வைத்துள்ளேன்.அந்தளவில் திருப்தி என்றார்.

மாளிகைக்காடு கிழக்கு வாசிகசாலையை உபநூலகமாக தரமுயர்த்தப்படவேண்டும் என்ற உபதவிசாளர் எ.எம்.ஜாகீரின் பிரேரணையில் சட்டச்சிக்கல் இருக்கின்ற காரணத்தினால் தவிசாளரின் பிரேரணையாகக் கொணர்ந்து சபை அங்கீகாரம் பெறப்பட்டது.

அதுதொடர்பிலும் வங்குரோத்து அரசியலுக்கு ஊடவியலாளரொருவர் வக்காலத்து வாங்குகின்ற அநாகரீக செயற்பாட்டினைக் கண்டிப்பதாகவும் மக்கள்சேவையில் அரசியல்செய்வதாகவும் ஸ்ரீல.மு.கா.மூத்தஉறுப்பினர் எம். எச்.எம்.இஸ்மாயில் குற்றம்சாட்டி உரையாற்றினார்.

பதிலுக்கு உபதவிசாளர் ஜாகீர் நான் அபிவிருத்தியில் ஒருபோதும் அரசியல் செய்வதில்லை. நான் யாருக்கும் அஞ்சவும்மாட்டேன் யாரிடமும் கெஞ்சவும்மாட்டேன். மக்களுக்கானசேவையைச் செய்கிறேன் செய்வேன் என்று மேசையில் பலமாகத் தட்டி உரையாற்றினார்.

உறுப்பினர் இஸ்மாயில் பதிலளிக்கயில்: குறித்த நூலகத்தை மண்மூடி அமைத்ததே நான்தான். அரசியல் பேசுங்கள் பொய் பேசாதீர்கள். 500வாக்குகளைப்பெற்றுவிட்டு கொக்கரிக்காதீர்கள்.நான் முதலாவது தேர்தலில் 4000வாக்குகளைப்பெற்றவன். கூஜாத்தூக்கும் ஊடகவியலாளரை வைத்துக்கொண்டு முகநூலிலும் இணையத்திலும் மற்றவர்களைவ விற்காதீர்கள்.என்றார்.

த.தே.கூ.உறுப்பினர் த.மோகனதாஸ் கூறுகையில் மயானத்திற்குச்செல்வோரையும் பொலிசார் பிடிக்கின்றனர். கேட்டால் தவிசாளரின் பெயர் அடிபடுகிறது. சிறுவர்பூங்கா இருள்சூழ்ந்துகிடக்கிறது சபைக்கு எதுவுமே செய்யவில்லை.என்றார்.

த.தே.கூ.உறுப்பினர் சி.ஜெயராணி பேசுகையில்: சபைக்குவந்து 38மாதங்களில் மக்களுக்கென ஒருசேவையும் செய்யமுடியவில்லை. ஒரு பல்பைக்கூட போட முடியவில்லை.சபையிலுள்ள ஒரேயொரு பெண்உறுப்பினர் நான். பெண்களுக்கான 25 வீதத்தில் 1 வீதம் கூட எனக்குத் தரப்படவில்லை.எனது கதை எடுபடுவதில்லை என்றார்.

மண்டூர் பாலமுனையில் கிராமோதய சிகிச்சை நிலையத்தினை அமைக்குக!

மகப்பேறு நிலையிலுள்ள நிறைமாத கர்ப்பிணிகள் கோரிக்கை!!

(சஞ்சயன்)

மட்டு. பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழுள்ள வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுக்குட்பட்ட மண்டூர் பாலமுனை கிராமத்தில், கிராமோதய சிகிச்சை நிலையம் உருவாக்கப்படாமையினால் சுகாதார சேவைகளைப் பெறுவதில் பல்வேறு அசௌகரிய நிலைக்குள்ளாவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

போரதீவுப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட 43 கிராம சேவையாளர்கள் பிரிவுகளிலுள்ள 15 கிராமோதய சிகிச்சை நிலையங்கள், பல்வேறு ஆளணி பௌதீக வளக் குறைபாடுகளுடன் இயங்கும் நிலையில், இச் சிகிச்சை நிலையங்கள் அனைத்திற்கும் வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரியே மருத்துவச் சிகிச்சைகளை வழங்கி வருவதாகவும் தெரியவருகிறது.

மண்டூர் பாலமுனை கிராமத்தில் கிராமோதய சிகிச்சை நிலையம் இன்மையினால் மகப்பேறு நிலையிலுள்ள நிறைமாத கர்ப்பிணிகள், கைக்குழந்தைகளுடனான பாலூட்டும் தாய்மார்கள், சிறுகுழந்தைகளுடனான தாய்மார்கள் கால்நடையாக பல கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து மாதம் இரு தடவை சிகிச்சையளிக்கப்படும்

வெல்லாவெளி மற்றும் திக்கோடை ஆகிய சுகாதார நிலைய கிளினிக்குகளில் சிகிச்சை பெறுவதாகவும், அதிக தூரம் செல்வதனால் நடக்க முடியாமல் களைப்படைந்து மயக்கமடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சடுதியாக கர்ப்பிணிகளுக்கு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படுமிடத்து, 25 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையையே நாடுவதாகவும், இவ்வாறு கொண்டு செல்லும் நிலையில், கடந்த காலங்களில் இரு உயிர்கள் பிரிந்த நிலையும் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

மகப்பேறு நிலையிலுள்ள நிறைமாத கர்ப்பிணிகளின் சுகாதார சிகிச்சைத் சேவை கருதி, கிராமோதய சிகிச்சை நிலையங்களை புதிதாக அமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

உண்மைச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள
WWW.SUPEEDSAM.COM

மட்டக்களப்பு பிள்ளையாரடி விஸ்பரூப ஆஞ்சநேயர் ஆலயத்தில் இடம்பெறவுள்ள ஸ்ரீராம நவமி விசேட பூசை

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு பிள்ளையாரடி விஸ்பரூப ஆஞ்சநேயர் ஆலயத்தின் ஸ்ரீராம நவமி விசேட பூசையானது நேற்று மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஆண்டிற்கு ஒரு தடவை இடம்பெறும் இவ் விசேட பூசையானது இன்று மாலை 5.00 மணிக்கு வஜனையுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து சிறப்பு அபிஷேகம் இடம்பெற்று, இராமபிரானுக்கு விசேட தீபாராதனையுடனான பூசைகள் இடம் பெறவுள்ளது.

விஸ்பரூப ஆஞ்சநேயர் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ உ.ஜெகதீஸ்வரன் குருக்கள் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ள விசேட பூசையில் அனைத்து பக்தர்களும் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக கலந்து கொண்டு இராமபிரானின் இறையாசியை பெற்றுச் செல்லுமாறு இறையன்புடன் அழைக்கின்றனர் ஆலய பரிபாலன சபையினர்.

கல்முனையன்ஸ் போரமினால் அம்பாறை மாவட்டத்தில் 8.6 தொன் பேரீச்சம் பழம் விநியோகம்

(எஸ்.அஷ்ரப்கான்)

அம்பாறை மாவட்ட மக்களுக்கு புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு பேரீச்சம்பழ பொதி வழங்கும் செயற்றிட்டம் கல்முனையன்ஸ் போரமினால் செவ்வாய்க்கிழமை (20) உத்தியோகபூர்வமாக கல்முனையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கல்முனையன்ஸ் போரத்தின் செயற்பாட்டாளர் முபாரிஸ் எம். ஹனீபா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத்அலி அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இச்செயற்றிட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

கல்முனை பிராந்தியத்தை தளமாக கொண்டு முற்போக்குடன் பல வினைத் திறன்மிக்க செயற்றிட்டங்களை முன்னெடுத்துவருகின்ற கல்முனையன்ஸ் போரமானது விடுத்த வேண்டுகோளுக்கமைய 8600 கிலோகிராம் பேரிச்சம்பழ தொகுதியினை பெஸ்ட் புட் மார்க்கெடிங் பிரைவட் லிமிடெட் நிறுவனத்தினர் நன்கொடையாக வழங்கியிருந்தனர்.

குறித்த பேரீச்சம்பழமானது அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட தொண்டர் அமைப்புக்களூடாக இணங்காணப்பட்ட பயனாளிக் குடும்பங்களுக்கு விநியோகிக்கப்படவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org